**_நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்_**

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**

**நீதித்துறை நடுவர்**

**அம்ப த்தூர்**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03 ஆம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 15/2018**

**TNTR29-000165-2018**

| | | |
|---|---|---|
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும்<br><br>குற்ற எண். | :<br><br>: | அரசு தரப்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலையம்,<br>குற்ற எண். 347/2016 |
| எதிரிகளின் பெயர், தந்தை பெயர், வயது மற்றும் முகவரி | : | 1. சுரேஷ்,<br>த/பெ.கோவிந்தன்,<br>எண்.17, பாரதி நகர், மிட்டணமல்லி, ஐஏஎப்,<br>ஆவடி, சென்னை - 55<br>2. சுரேந்தர்,<br>த/பெ.பொன்னன்,<br>எண்.54/28, ஏழுமலை தெரு, அயனாவரம்,<br>சென்னை - 23 |
| எதிரிகளின் ஜாதி அல்லது இனம் | : | இந்து |
| எதிரிகளின் தொழில் | : | கூலி |

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 26.06.2016 |
| புகார் தேதி | : | 26.06.2016 |
| 1 வது எதிரி கைது செய்யப்பட்ட நாள்<br>2 வது எதிரி கைது செய்யப்பட்ட நாள் | :<br>: | 26.06.2016<br>26.06.2016, 26.11.2024 |
| 1வது எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்<br>2வது எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | :<br>: | 29.06.2016<br>05.07.2016, 05.12.2024 |
| விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | : | 20.07.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 21.07.2026 |
| தண்டனை மற்றும் உத்தரவு | : | இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 341, 384 உ/இ 34 இதச வின் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி கண்ணுற்ற சாட்சிகள் மூலமும், சூழ்நிலை சாட்சிகள் மூலமும், நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகளுக்கு சட்டப்பிரிவுகள் 341 உ/இ 34 இதச வின் படியான குற்றத்திற்கு 1வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான **4 நாட்களை** மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், மேலும் 1வது எதிரிக்கு சட்டப்பிரிவு |

| | | |
|---|---|---|
| | | 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டிற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான **<u>4 நாட்களை</u>** மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், அபராதம் **<u>ரூ.1,000/-</u>** விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **<u>ஒரு மாத காலம்</u>** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 248 (2) கு.வி.மு.ச.வின் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் 1வது எதிரி இவ்வழக்கிற்காக 26.06.2016 முதல் 29.06.2016 வரையிலான **<u>4 நாட்களை</u>** அவருக்கு விதிக்கப்பட்ட மேற்படி தண்டனையிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428 இன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகிறது. இந்த இரண்டு பிரிவுகளுக்கான தண்டனைகளை 1வது எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதத் தொகை **<u>ரூ.1,000/-</u>**<br>மேலும் 2வது எதிரிக்கு சட்டப்பிரிவுகள் 341 உ/இ 34 இதச வின் படியான குற்றத்திற்கு 2வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான **<u>20 நாட்களை</u>** மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், மேலும் 2 வது |

எதிரிக்கு சட்டப்பிரிவு 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டிற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான **20 நாட்களை** மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், அபராதம் **ரூ.1,000/-** விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **ஒரு மாத காலம்** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 248 (2) கு.வி.மு.ச.வின் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் 2 வது எதிரி இவ்வழக்கிற்காக 26.06.2016 முதல் 05.07.2016 மற்றும் 26.11.2024 முதல் 05.12.2024 வரையிலான **20 நாட்களை** அவருக்கு விதிக்கப்பட்ட மேற்படி தண்டனையிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428 இன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் இந்த இரண்டு பிரிவுகளுக்கான தண்டனைகளை 2 எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதத் தொகை **ரூ.1,000/-**

இவ்வழக்கில் பி.ஐ.எண்.20/2018 தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான பணம் ரூ.350/- தொகையை அதன் உரிமையாளர் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுச்

| | | |
|---|---|---|
| | | சென்றுள்ளதால் மேற்படி ரூ.350/- தொகையை அவரே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல் முறையீட்டின் காலத்திற்கு பின்னர் அவர் எழுதிக் கொடுத்த பிணை முறி இரத்தாகவும் மேலும் பி.ஐ.எண்.21/2018 தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தான சிறிய கத்தி ஒன்றை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் முழுமையாக அழிக்க உத்தரவிடப்படுகிறது. |
| காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுதரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதில் காலதாமதம் |

இந்த வழக்கு 14.03.2018 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை 1 திரு.கொளஞ்சிநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.திவாகர், திரு.M.S.ஆதில், திரு.S.M.ரகுராம் மற்றும் திரு.M.அறிவேந்தன் ஆகியோர் முன்னிலையாகியும் இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலையம், குற்ற எண். 347/2016 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 341, 384 r/w 34 IPC இன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 173(2) கு.வி.மு.ச - வின் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**ஃ1) குற்ற இறுதி அறிக்கை :-**

கடந்த 26.06.2016 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாலவேடு ஆஞ்சநேயர் கோயில் சந்திப்பு அருகில் சாட்சி-1 திரு.செல்வராஜ் என்பவர் வந்து கொண்டிருந்த போது அங்கு வந்த 1வது எதிரி சுரேஷ் மற்றும் 2வது எதிரி சுரேந்தர் ஆகியோர் சேர்ந்து பணம் பறித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு சாட்சி-1 ஐ வழிமறித்து "பாக்கெட்டில் பணம் எவ்வளவு வச்சிருக்க?" என்று கூறி கத்தியைக் காட்டி எதிரிகள் இருவரும் சாட்சி-1 ஐ அச்சுறுத்தி மிரட்டியதால் சாட்சி-1 பயந்து தன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.500/- ஐ எடுத்து கொடுத்ததாகவும், எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 384 உ/இ 34 இதச வின் கீழ் டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் 14.03.2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 14.03.2018 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகள் பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 08.07.2026 ஆம் தேதியன்று எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPC இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்தும், அது குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார்கள். எனவே இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் காட்டப்பட்டு அதில் அ.சா.1 மட்டும் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பு சான்று பொருட்கள் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின் வருமாறு</u> :-**

கடந்த 26.06.2016 ஆம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி திரு.செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.த.சா.ஆ.1** ஆன புகாரினைப் பெற்று குற்றஎண். 347/2016, சட்டப்பிரிவுகள் 341, 384 உ/இ 34 இதச வின் கீழ் **அ.த.சா.ஆ.2** ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அதன் பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி, ராஜேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.3** ஆன பார்வை மகஜரும், **அ.த.சா.ஆ.4** ஆன மாதிரி வரைபடமும் தயார் செய்து பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. மேலும், தமிழ்வாணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகளை கடந்த 26.06.2016 அன்று கைது செய்த போது எதிரிகள் சுரேஷ் மற்றும் சுரேந்தர் ஆகியோர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறிய கத்தி ஒன்றை **அ.த.சா.ஆ.7** ஆன கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். மேலும், இரண்டாம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான ரூ.350/– பணத்தை **அ.த.சா.ஆ.8** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்பு வழக்கு சொத்தை **அ.த.சா.ஆ.9** மற்றும் **அ.த.சா.ஆ.10** ஆன படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்து, அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை 14.03.2018 அன்று தாக்கல் செய்துள்ளார்.

7) புகார் **அ.த.சா.ஆ.1,** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2,** பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3,** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4** ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5,** ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.6,** கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.7** கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.8** படிவம் 91 **அ.த.சா.ஆ.9,** படிவம் 91 **அ.த.சா.ஆ.10,** பிரிவு மாற்று அறிக்கை **அ.த.சா.ஆ.11,** ரூ.350/– தொகை **அ.த.சா.பொ.1,** சிறிய கத்தி **அ.த.சா.பொ.2** ஆகும். இதுவே அரசுத்தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் ஆகும்.

8) இவ்வழக்கில் கடந்த 21.07.2026 ஆம் தேதியில் அரசுதரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச. வின் கீழ் வினவிய போது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்து கூறினர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை எனக் கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9) **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை :-**

இவ்வழக்கின் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPC கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

10) **தீர்வு**

(i) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுதரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், சான்று பொருள்களிலிருந்தும், எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPCஇன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

(ii) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் அரசுதரப்பு சாட்சிகள் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை எனவும், அரசுதரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை எனவும், அதனடிப்படையில் எதிரிகளிடமிருந்து எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை எனவும், இவ்வழக்கின் சான்றாவணங்களான பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், அரசுதரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

(iii) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி-1 திரு.செல்வராஜ் மற்றும் ஏனைய பட்டியல் சாட்சிகளான 2 முதல் 7 வரையிலானோர் தற்பொழுது எங்கு வசிக்கிறார்கள்? என்பது கண்டறிய முடியாததால் மேற்கண்ட சாட்சிகளை விசாரணை செய்வதிலிருந்து அரசுதரப்பு விலக்கி கொண்டு, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.ராஜன் என்பவருக்கு பதிலாக உதவி ஆய்வாளர் திரு.ராஜசேகர் என்பவர் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(iv) மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தில் கடந்த 26.06.2016 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி-1 திரு.செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.த.சா.ஆ.1** ஆன புகாரை பெற்று நிலைய குற்ற எண்.347/2016 சட்டப்பிரிவுகள் 341, 384 r/w34 IPC இன் படி **அ.த.சா.ஆ.2** ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அதன்பின்பு சம்பவயிடம் சென்று, சம்பவயிடத்தை

பார்வையிட்டு **அ.த.சா.ஆ.3** ஆன பார்வை மகஜர் மற்றும் **அ.த.சா.ஆ.4** ஆன மாதிரி வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

(v) மேலும் சாட்சிகளை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகளை கடந்த 26.06.2016 அன்று கைது செய்த போது எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பெற்று, அதன் அடிப்படையில் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் **அ.த.சா.ஆ.7** மற்றும் **அ.த.சா.ஆ.8** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து வழக்கு சொத்துக்களை **அ.த.சா.ஆ.9** மற்றும் **அ.த.சா.ஆ.10** ஆன படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

(vi) மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்தும், **அ.த.சா.ஆ.7** மற்றும் **அ.த.சா.ஆ.8** ஆன கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.9** ஆன கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.10** ஆன படிவம் 91 மற்றும் ஏனைய சான்றாவணங்களிலிருந்தும், கடந்த 26.06.2016 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாலவேடு ஆஞ்சநேயர் கோயில் சந்திப்பு அருகில் சாட்சி-1 திரு.செல்வராஜ் என்பவர் வந்து கொண்டிருந்த போது அங்கு வந்த 1வது எதிரி சுரேஷ் மற்றும் 2வது எதிரி சுரேந்தர் ஆகியோர் சேர்ந்து பணம் பறித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு சாட்சி-1 ஐ வழிமறித்து, சாட்சி-1 ஐ அச்சுறுத்தி மிரட்டி, சாட்சி-1 இடமிருந்து பணம் ரூ.500/- ஐ பறித்து சென்று குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கருதுகின்றது.

(vii) எதிரிகள் தரப்பில் இவ்வழக்கில் தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளையும், நிகழ்நிலை புகார்தாரரான திரு.செல்வராஜ் என்பவரையும் விசாரணை செய்யப்படவில்லை என வாதம் முன் வைக்கப்பட்டாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக

விசாரணை செய்யப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜசேகர் என்பவரின் நம்பத்தகுந்த சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகள் 1வது எதிரி சுரேஷ் மற்றும் 2வது எதிரி சுரேந்தர் ஆகியோர் நிகழ்நிலை புகார்தாரரான திரு.செல்வராஜ் என்பவரை வழிமறித்து, கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ.500/- ஐ பறித்து சென்று குற்றம் புரிந்துள்ளது அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதப்படுகிறது.

(viii) எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டு அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ix) இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டு அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி போதிய சாட்சிய, சான்றாவணங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட எதிரிகளை சட்டப்பிரிவுகள் 341, 384 r/w 34 IPC இன் படி குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளிடம் அவர்களுக்கு அளிக்கப்போகும் தண்டனை குறித்து வினவிய போது "தாங்கள் ஏழை என்றும், தங்களை நம்பி தங்களது குடும்பம் உள்ளதாகவும், தங்களது குடும்பத்தில் தாங்கள் ஒருவர் மட்டுமே வருமானம் ஈட்டும் நபர்கள் என்றும், எனவே கருணை கூர்ந்து குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு" கேட்டுக் கொண்டனர்.

(x) இவ்வழக்கின் சங்கதிகள், சூழ்நிலைகள் மற்றும் குற்றத்தின் தன்மை ஆகியவற்றை பரிசீலனை செய்யும் பொழுது இவ்வழக்கின் எதிரிகளுக்கு சட்டப்பிரிவு 360 கு.வி.மு.ச.வின் பலன்களையோ, குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு சட்டம் 1958 இன் கீழான பலன்களையோ வழங்குவது உகந்ததாக இருக்காது என நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(xi) இவ்வழக்கில் எதிரிகளின் வயது, குடும்ப சூழ்நிலை அவர்களின் வாழ்வியல் அமைப்பு, மற்றும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இவ்வழக்கை பொறுத்து எதிரிகளுக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11. <u>**முடிவாக**</u>

(அ) இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 341, 384 உ/இ 34 இதச வின் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி கண்ணுற்ற சாட்சிகள் மூலமும், சூழ்நிலை சாட்சிகள் மூலமும், நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகளுக்கு சட்டப்பிரிவுகள் 341 உ/இ 34 இதச வின் படியான குற்றத்திற்கு 1வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான <u>**4 நாட்களை**</u> மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், மேலும் 1வது எதிரிக்கு சட்டப்பிரிவு 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டிற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான <u>**4 நாட்களை**</u> மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், அபராதம் <u>**ரூ.1,000/-**</u> விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் <u>**ஒரு மாத காலம்**</u> மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 248 (2) கு.வி.மு.ச.வின் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் 1வது எதிரி இவ்வழக்கிற்காக 26.06.2016 முதல் 29.06.2016 வரையிலான <u>**4 நாட்களை**</u> அவருக்கு விதிக்கப்பட்ட மேற்படி தண்டனையிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428 இன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகிறது. இந்த இரண்டு பிரிவுகளுக்கான தண்டனைகளை 1வது எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதத் தொகை <u>**ரூ.1,000/-**</u>

(ஆ) மேலும் 2வது எதிரிக்கு சட்டப்பிரிவுகள் 341 உ/இ 34 இதச வின் படியான குற்றத்திற்கு 2வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான <u>**20 நாட்களை**</u> மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், மேலும் 2 வது எதிரிக்கு சட்டப்பிரிவு 384 r/w 34 IPC இன் படியான குற்றச்சாட்டிற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களான <u>**20 நாட்களை**</u>

மெய்க்காவல் சிறை தண்டனையாக விதித்தும், அபராதம் **ரூ.1,000/-** விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் **ஒரு மாத காலம்** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், சட்டப்பிரிவு 248 (2) கு.வி.மு.ச.வின் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் 2 வது எதிரி இவ்வழக்கிற்காக 26.06.2016 முதல் 05.07.2016 மற்றும் 26.11.2024 முதல் 05.12.2024 வரையிலான **20 நாட்களை** அவருக்கு விதிக்கப்பட்ட மேற்படி தண்டனையிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428 இன் கீழ் கழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் இந்த இரண்டு பிரிவுகளுக்கான தண்டனைகளை 2 எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதத் தொகை **ரூ.1,000/-**

(இ) இவ்வழக்கில் பி.ஐ.எண்.20/2018 தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான பணம் ரூ.350/- தொகையை அதன் உரிமையாளர் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுச் சென்றுள்ளதால் மேற்படி ரூ.350/- தொகையை அவரே வைத்துக் கொள்ளவும், வழக்கின் மேல் முறையீட்டின் காலத்திற்கு பின்னர் அவர் எழுதிக் கொடுத்த பிணை முறி இரத்தாகவும் மேலும் பி.ஐ.எண்.21/2018 தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தான சிறிய கத்தி ஒன்றை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் முழுமையாக அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

JAISANKAR Digitally signed by JAISANKAR

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | : | திரு. இராஜசேகர் (காவல் உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.ஆ.1** | : | புகார் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.2,** | : | முதல் தகவல் அறிக்கை | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.3** | : | பார்வை மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.4,** | : | மாதிரி வரைபடம் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.5,** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.6,** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.7,** | : | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.8,** | : | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.9** | : | படிவம் 91 | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.10** | : | படிவம் 91 | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.11** | : | பிரிவு மாற்று அறிக்கை | அ.சா.1 |

அரசுதரப்பு சான்று பொருள் :-

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.பொ.1,** | : | ரூ.350/- பணம் | அ.சா.1 |
| **அ.த.சா.பொ.2,** | : | சிறிய கத்தி | அ.சா.1 |

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

## <u>Case Summary : -</u>

1) 1 வது எதிரி சிறையில் இருந்த நாட்கள் -- 4 days

2 வது எதிரி சிறையில் இருந்த நாட்கள் -- 20 days

| | | |
|---|---|---|
| 2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | -- | 14.03.2018 |
| 3) எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் | -- | 20.07.2026 |
| 4) எதிரி மீதான குற்றச்சாட்டை விளக்கிக் கேட்ட நாள் | -- | 20.07.2026 |
| 5) இடைக்கால மனு விபரம் | -- | ------- |
| 6) சாட்சிகளின் விசாரணை நாள் | | |
| அ.சா.1 -- முதல் விசாரணை | -- | 21.07.2026 |
| குறுக்கு விசாரணை | -- | 21.07.2026 |
| 7) 7) எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி) கு.வி.மு.ச.வின் கீழ் விசாரிக்கப்பட்ட நாள் | -- | 21.07.2026 |
| 8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் | -- | ----- |
| 9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் | -- | இல்லை |

JAISANKAR Digitally signed by JAISANKAR

குறிப்பு :-

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இல்லை.

2) காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு தெரிவிக்கப்பட்டது.